அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VII.] 1907—௵. [இலக்கங்கள் 2, 3, 4.

ஜெந்துக்களைப் பலி இடுதல்.

பசுக்களைப் பலிகொடுப்பது தருமமா? அல்ல, அது அதர்மம். ஒரு பிராணிக்கு உயிர் உண்டாக்கச் சக்தியில்லா ஒரு மனிதன் இன்னொரு பிராணியின் உயிரை வாங்கிவிடுவதற்கு என்ன சுதந்தரமிருக்கிறது. கடவுளால் உண்டாக்கப்பட்ட இதர பிராணியை ஒருவன் பலியிடுவசற்கு என்ன அதிகாரமிருக்கிறது. பிராணனை உண்டாக்கினவன் அழிக்கலாமேயன்றி, வேறொருவன் அழிப்பதானால் அவனுக்குண்டாகும் லாபம் பாபமேயொழியப் பிறிதொன்றுமில்லை. பலியிடுபவன் தன் இருதயமென்னும் பலிபீடத்தின் சமீபத்தில் காமக்குரோதாதி குணங்களைப் பலிகொடுப்பதற்குத் தகுதியானவன். இத்துற்குணங்களையே கடவுளுக்குப் பலிகொடுக்கவேண்டியது. பலமுள்ளவ னனுசரிக்கவேண்டிய கடமையாவது, பலஹீனர்களை ரக்ஷிக்கவேண்டியதுதான். ஒரு மனிதனானவன் தன்னைப்போலொத்த ஒரு ஜீவனை ஹிம்ஸிப்பது தகுதியான காரியமல்ல.

மிருகங்களுக்குக்கூட ஆத்மா விருக்கிறதென்னும் சித்தாந்தத்தை நம் தேசத்தின் உயர்ந்த மஹரிஷிகள் தங்கள் மதகிரந்தங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். "அஹிம்ஸா பரமோ தர்மஹா" அதாவது இதர பிராணிகளுக்கு யாதொரு ஹிம்ஸையும் செய்யாமலிருப்பதே உயர்ந்த தர்மமென்று கேட்டிருக்கிறோமல்லவா? தர்மங்களில் இது மிகவும் சாத்விகமானதென்று ஞானிகள் மொழிந்திருக்கிறார்களல்லவா? அவர்கள் விவேக ஈனர்களா? அவர்கள் அப்படியேன் சொல்லியிருக்கிறார்கள்! அதை யுணராத பாமரர்கள் தாங்கள் பூர்விகர்களை விட மிகவும் அறிந்தோரைப்போல நடித்துக் கொலைசெய்வதடாத காரியமென்பதை மறந்துவிட்டிருக்கிறார்கள். ஐயோ, இதென்ன காலவிபரீதம்! மாமிசபக்ஷணிகளாகிய பாவி ஆர்யர்களை, கவுதம புத்தர் ஜெந்து ஹத்திப் பாவத்திலிருந்து நீக்கினாரன்றோ! இதல்லவோ நாம் மறக்கக்கூடாத சித்தாந்தம்? ஹிம்ஸிப்பவன் பாவங்களுக்குப் பாத்திரவானாகிறான். அவனுடைய இந்திரியபலம் கெட்டுப்போகும். அவன் மிகவும் கடின இருதயமுள்ளவனாவான். அப்பேர்ப்பட்ட குரூரன் ஒரு பெண்ணுக்குப் புருஷனாகத் தகாதவன். தகப்பனாகவு மிருக்க அருகனல்லன். அப்பேர்ப்பட்டவனுடைய சிநேகிதம் பெருங்காயம் கலந்த பச்சைக் கர்ப்பூரம்போலாகும். அவன் உலகில் வசிப்பது பூமிக்குப் பாரமென்று எண்ணவேண்டியது.

குதிரையின்பேரில் பிரீதி இல்லாத துர்மார்க்கனுக்கு விதிக்கத்தக்க தண்டனை.

குதிரைகள்பேரில் சிறிதேனும் தயையில்லாமல் அவற்றிற்குத் தீங்கு செய்பவர்கட்கு எவ்வளவு தண்டனை விதித்தாலும் தீராது. குதிரையானது மனிதனைக்காட்டிலும் அதிக பலமுடைய ஜெந்து. குதிரை அதிக பலமுடையதா யிருந்தபோதிலும்,

தனக்குத் தீங்கு செய்பவர்களைத் தன் முழுபலத்தைக்கொண்டு பிரதி அபகாரம் செய்யாமலிருப்பது மிகவும் விந்தையாயிருக்கிறது. குதிரைகள் சாந்தகுணமுள்ள ஜெந்துக்களானதால் அவைகள் எவர் என்ன தீங்கு செய்தபோதிலும் பதிலுக்குத் தீங்கு செய்யத் தலைப்படாமல் மிகவும் தாழ்ந்து தமக்கு தீங்கு செய்தவர்களுக்குப் பதிலுபகாரம் செய்வது அவற்றின் பொறுமையை வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. வாயில்லா ஜீவராசிகளை ஹிம்ஸிக்கும் துன்மார்க்கர்களுக்குக் கடவுளால் ஒருவிதமான தண்டனை உண்டாகுமேயன்றி உண்டாகாமற் போகாது.

இதற்கு ஓர் திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளுங்கள்: குதிரையின்பேரில் கொஞ்சமேனும் தயையில்லாத ஓர் துன்மார்க்கன் ஒருநாள் முழு பாரமுள்ள ஒரு பெரிய வண்டியில் தன் குதிரையைக் கட்டி அக்குதிரையின்பேரில் தானும் ஏறிக்கொண்டு ஓட்டிக்கொண்டு போனான். போகும்போது குதிரையைச் சீக்கிரமே போகச்செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் தன் காலில் போட்டிருந்த முள்தைத்த செருப்பினால் குதிரையைக் குத்தி உதைக்கத் தன் காலைத் தூக்கினான். அவன் அவ்வாறு காலைத் தூக்கவே தான் குதிரையின்பேரில் உட்கார்ந்துகொண்டிருந்த சமஸ்திதியானது மாறிக் கீழே விழுந்துவிட்டான். உடனே வண்டியின் சக்கரம் அவன் காலின்பேரில் ஏறிக் காலெலும்பு நசுங்கிப்போய்விட்டது. பிறகு அவன் எழுந்து நடமாடச் சக்தியில்லாமல் படுத்துக்கொண்டிருந்தான். இவ்வாறு அவன் படுத்துக்கொண்டிருக்கும்போது ''கெடுதி செய்பவர்க்குக் கெடுதி உண்டாகும்'' என்பதுபோல் நாம் செய்த கொடிய காரியத்தினால்தான் நாம் இவ்வாறு தீங்கனுபவிக்கிறோமோ வென்று மனோவியாகுலப்பட்டுக்கொண்டிருந்தான். அத்துன்மார்க்கனுக்கு இதைப் பார்க்கிலும் வேறு தண்டனை வேண்டுமோ? இம்மாதிரி ஓர் எஜமானனிடத்தில் அநேக வருடங்கள் ஊழியம் செய்துவந்த ஒரு கூலிக்காரன் தன் யஜமானன் அப்பொழுதுதான் புதியதாக வாங்கின ஒரு குதிரையை ஹிம்ஸித்ததற்காக ஒருமாதச் சம்பளம் கொடுக்கப்படாமல் வேலையினின்றும் தள்ளிவிடப்பட்டான். இப்பேர்ப்பட்ட தண்டனைகள் அந்தந்த சமயங்களில் விதிக்கப்பட்டால் கல்மனதும் மெழுகைப்போலுருகி நல்ல புத்தியுண்டாகிப் பிரியத்துடன் ஜீவராசிகளைப் போஷிப்பார்களென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

இது தெரிந்த ஓர் பிரபு தன் வேலைக்காரர்கள் மற்ற விஷயங்களில் எவ்வளவு நல்லவர்களாயிருந்தபோதிலும், குதிரைகள் விஷயத்தில் துன்மார்க்கர்களாக விருக்கிற சங்கதியைக் கேள்விப்பட்டால், உடனே அவர்களைத் தம் வீட்டுக்கு வாராமற்படி துரத்திவிடுவது வழக்கம். ''அநேகர் குதிரைகளைச் சாதாரணமான நாற்கால் மிருகங்களென்று எண்ணுகிறார்கள். குதிரைகள் செய்யும் மிகவும் அபரூபமான காரியங்களைப் பார்த்தால் குதிரையை மிருகமென்று எண்ணத்தகுமா? மனிதர்களை விட சிரேஷ்டமானவை யென்று எண்ணவேண்டியது. நான் எப்பொழுதும் குதிரைகளோடு சம்பாஷித்துக்கொண்டிருப்பேன்; அக்குதிரைகளும் என்னுடன் சம்பாஷிப்பதற்கு மிகவும் ஆசைகொண்டிருக்கின்றன'' என்று அப்பிரபு தாமே சொல்லியிருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட குதிரைகளைப் பிரியத்துடன் காப்பாற்றி அவற்றால் உண்டாகும் நல்ல பிரயோஜனங்களை அனுபவிப்பதை விட்டு அநேகர் அநேக விதங்களாக அவைகளை ஹிம்ஸித்துப் பாவங்களை மூட்டைகட்டிக்கொள்ளுகிறார்கள். கடவுளால் குதிரைகளுக்கு உண்டாக்கப்பட்டிருக்கும் வால் மயிர்களையும், பிடரிமயிர்களையும் அநேகர் கத்தரித்துவிட்டு அக்கிரமஞ் செய்கிறார்கள். குதிரைகளுக்கு அவசியமாக வேண்டுமென்று, பிறவியிலிருந்தே கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் வால் மயிர்களையும் பிடரிமயிர்களையும் அவலக்ஷணமாகக் கத்தரித்துவிட்டுக் கடவுளைக்காட்டிலும் தாங்கள் அதிகமாகத் தெரிந்தவர்களைப்போல் நடிக்கிறார்கள். அவர்களுக்குப் புத்திவரும்படியாக வேறொரு உபாயம் செய்யவேண்டியதில்லை. கால்களையும், கைகளையும் கட்டி அவர்களை, ஈக்கள், கொசுகுகள் முதலானவைகள் அதிகமாக விருக்குமிடத்தில் இரண்டு மூன்று தினங்கள் கிடத்திவைத்தால் அதுவே அவர்களுக்குத் தகுதியான தண்டனையாகும். அத்தண்டனையே அவர்களுக்கு நல்ல புத்தி உண்டாமாறு செய்யும்.

குதிரையென்பது உலோகத்தால் செய்யப்பட்ட ஓர் யந்திரமல்ல; அது நம்மைப்போல் ஆகாரத்தை வேண்டுவதும், ஆசையுள்ளதுமான பிராணி என்பதை யாவரும் சரியாக ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டியது. இவ்விஷயம் எவர் மனதில் நன்றாக ஊன்றியிருக்கிறதோ அவர்களே குதிரைகளை நன்றாய்ப் போஷித்து அவைகளால் கூடுமான சகாயத்தை அனுபவித்துச் சுகமடைவார்கள். நன்றாய்ப் போஷிக்கப்படாத குதிரை நன்றாய்ப் போஷிக்கப்படாத பாலகனைப்போல் பிரயோஜனமில்லாததாகும். உங்கள் எஜமானன் மிகவும் பெரிய ஓர் பெட்டியை எடுக்கும்படி உங்களுக்குக் கட்டளையிட்டதாக நினையுங்கள், உங்களால் ஆனமட்டும் நீங்கள் பிரயாசைப்பட்டுப் பார்த்தும் அதை எடுக்க உங்களால் முடியாமற்போனால் உங்கள் எஜமானன் தான் சொன்னபிரகாரம் உங்களுக்கு அதை எடுக்கச் சக்தியில்லை என்று உங்களை யடித்தால் நீங்கள் அவனைக்குறித்து என்ன நினைப்பீர்கள்? பேதை ஜெந்துக்களான குதிரைகளும் இவ்வாறுதானே கஷ்டங்களனுபவிக்கும்?

குதிரைகளையோட்டும் சிலருக்குச் சவுக்காலடிக்கத் தெரியுமேயன்றி வேறொரு உபாயமும் தெரியாது. இது மிகவும் அவிவேகம். ஒரு ஜீவனை ஹிம்ஸிப்பது மிருகங்களின் சுபாவமேயன்றி மனிதர்களுடைய சுபாவமல்ல. வாயில்லா ஜீவன்களின் சுகதுக்கங்களை அறிந்து அவைகளைத் தகுதியாக போஷிக்காதவர்கள் அச்செந்துக்களினால் உண்டாகும் நன்மையை எக்காலத்தும் சிறிதளவும் அனுபவிக்கமாட்டார்கள்.

பெற்றவளைக்காட்டிலும் பிரியம் காட்டிய நாய்.

அமெரிக்கா தேசத்தில் நியூயார்க் என்ற பட்டணத்தில் குடியானவனொருவன் ஒரு நாயைச் சிறுகுட்டியிலிருந்தே வளர்த்துவந்தான். அவன் நாயினிடத்து எவ்வளவு பட்சம் வைத்திருந்தானோ அவ்வளவுக் கதிகமான பிரியம் தன் எஜமானனிடம் அந்த நாய் வைத்திருந்தது. தினந்தோறும் அந்த நாய் ஓரிடத்தில் கட்டப்படுவது வழக்கம். ஒருநாளிரவு கட்டப்படாமையால் எஜமானன் வீட்டுக் கதவைப் போய்ப் பறண்ட ஆரம்பித்தது. இச்சத்தத்தைக் கேட்ட அக்குடியானவன் கதவைத் திறந்துபார்க்க, நாயானது வாலையாட்டி எஜமானிடத்துள்ள அன்பைக்காட்டித் தன்னைத் தினந்தோறும் கட்டிவைக்குமிடத்திற்கு ஓட ஆரம்பித்தது. எஜமானனும் நாயைப் பின்றொடர்ந்தான். எஜமான் கூட வருகின்றானோ இல்லையோ என்ற சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்துக்கொண்டேயோடி, அவ்வழியில் புல்லின்மீது கிடத்திவைத்திருந்த ஒரு சிறு குழந்தையைத் தன் எஜமானுக்கு காட்டிற்று. குழந்தையைப் புல்லின்பேரில், கொடும்பாவியாகிய அக்குழந்தையின் தாயார் கிடத்திவிட்டுப் போய்விட்டதினால் குழந்தைக்குத் தேகத்தில் குளுமை அதிகரித்திருந்தது. அதைக்கண்ட நாயானது குழந்தையைப் புரட்டி, மோந்து, அதைச் சிறிதுநேரம் சேர்த்தணைத்துக்கொண்டிருந்து சூடுண்டாக்கித் தன் எஜமானிடம் கொண்டுவர, குடியானவன் கண்டதிசயித்து அக்குழந்தையை ஒரு சாலையோரத்தில் புல்லின்மேல் எந்தக் கொடும்பாதகியோ கிடத்திவிட்டுப் போயிருக்கலாமெனத் தெரிந்துகொண்டு குழந்தையை மகிழ்வுடன் எடுத்து வளர்க்க உத்தேசித்து நாயின் விசால புத்தியை மெச்சிக் குழந்தையை அன்புடன் வளர்த்துவந்தான். இதனால் நாய்க்கிருந்த வொரு நல்லறிவும், பெற்ற பேய்க்கிருந்த புல்லறிவும் விளங்கிற்று.

கொலைசெய்யும்படி கட்டளையிட்ட அரசனுடைய கட்டளையைச் சிரசில் வகிக்கும் தலையாரியும், மிருக இம்சைபுரியும் கசாய்க்காரன் முதலானவர்களும் மேற்படி நாயைவிட அநேகமடங்கு குறைந்த குணமுள்ளவர்களாகவிருந்தாலும் ஜனசங்கத்திற்கு வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடன்கூட உங்களில் எவ்வளவுபேர் சிநேகம்புரிந்து நடமாடுவீர்கள்? சாத்விககுணம், குரூரனை விட்டு நீங்கும். பச்சாத்தாபம் பூததயையில்லாதவனின் ஜன்மம் வியர்த்தமாகும்.

மனதிடமும் தயாளமுமுள்ள ஒரு பெண்.

ஒருநாள் ஒரு சிறுபெண் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும்வழியில் சில சிறுவர்கள் ஒரு குளத்தின் கரையில் கும்பலாக நின்றுகொண்டு கூச்சலிட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவ்விடத்தில் கொடிய அப்பாலகர்கள் ஒரு பூனைக்குட்டியைப் பிடித்துக் கொண்டுவந்து அதை ஜலத்தில் விசிறிப்போட்டு, அப்பூனைக்குட்டி ஜலத்தில் விழுந்து பயந்து நீந்திக்கொண்டு கரைக்கு வரமுடியாமல் தத்தளிப்பதைக் கண்டு கைகள் கொட்டிக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டும், சிரித்துக்கொண்டுமிருந்தார்கள். அச்சமயத்தில் அவர்களிடமிருந்த நாய்கள் மிகவும் பயங்கரமாகக் குலைத்து அப்பூனைக்குட்டிக்கு மிகவும் பயமுண்டாக்கின. இக்கொடிய செய்கைகளைக் கண்ட அப்பெண்ணுக்கு மிகவும் கோபமுண்டாயிற்று. உடனே அப்பெண் அச்சிறுவர்களையும், நாய்களையும் அப்புறம் தள்ளிவிட்டு ஜலத்திலிறங்கி மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கும் பூனைக்குட்டியை எடுத்துக்கொண்டாள். இதைப்பார்த்து அச்சிறுவர்கள் மிகவும் வெட்கித் தலைகுனிந்துகொண்டு ஒவ்வொருவராக ஓடிப்போய்விட்டார்கள். அவ்வளவு கருணையுள்ள அப்பெண், குளிரினால் மிகவும் நடுங்கிக்கொண்டு குற்றுயிராகவிருந்த அப்பூனைக்குட்டியை என்னசெய்யலாமென்று கொஞ்சநேரம் நின்று ஆலோசித்தாள். எவ்வளவு ஆலோசித்தாலும், என்னசெய்வதென்று அப்பெண்ணுக்குத் தோன்றவில்லை. அப்பொழுது அப்பூனைக்குட்டிக்கு அரைப்பிராணம் போய்விட்டதாகவிருந்தது. மேலும் அச்சிறுவள் தன் வீட்டில் அநேக பூனைகளும், பூனைக்குட்டிகளுமிருப்பதால் இதைக் கொண்டுபோய் வளர்க்க முடியாமற்போய்விட்டது. பிறகு அப்பெண் பூனைக்குட்டியைப் பார்த்து மிகவும் விசனப்பட்டு, "ஐயோ! பேதை ஜெந்துவே, உன் பிராணனை போக்கடித்துக்கொள்ள வேண்டியது தவிர வேறு உபாயம் ஒன்றுமில்லை" யென்று சொல்லிக்கொண்டாள். "என்றாலும் சித்திரவதையில்லாமல் சுகமாக பிராணனைப் போக்கடித்துக்கொள்ளும்படி செய்கிறேன்" என்று அழுதுகொண்டு கடவுளைப் பிரார்த்தித்துக் கண்ணீர்விட்டுக்கொண்டு இந்த லோகத்தின் சங்கடங்கள் அதற்கு நீங்குமாறு மிக்க தைரியத்துடன் அப்பூனைக்

குட்டியை நீரில் அமிழ்த்துவிட்டாள். நாய்களாலும், நாய்களைக்காட்டிலும் கொடியவர்களாகிய அச்சிறுவர்களாலும் அகப்பட்டுக்கொண்டு சித்திரவதைப்படாமல் அப்பூனைக்குட்டி பிராணனை விட்டுவிடச் செய்தது நிஜமான ஜீவகாருண்யமல்லவா?

எல்லாரும் கொடியவர்களாகவிருந்தால் ஆதரவில்லாத பேதை ஜெந்துக்களின் கதி என்னவாகும். அவைகள் கஷ்டப்படுத்தப்பட்டு பரிதபித்துக்கொண்டிருக்கின்றனவே. அவைகளுக்குப் பசிவேளையில் ஆகாரம் கிடைக்காது. நாய்கள் குலைத்து பயப்படுத்துகின்றன. துன்மார்க்கர்களாகிய பாலர்கள் பிடித்துக்கொண்டு பலவிதங்களில் அவைகளை ஹிம்ஸித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஜீவன்களின் கஷ்டத்தைப்பார்த்து கனிகரமுள்ளவர்களாய், அவைகளைக் காப்பாற்றுவது உத்தமமான தர்மமல்லவா! இதுதான் ஜீவகாருண்யமெனப்படும்.

நாய்கள் யோசனை செய்யுமா?

நாய்களில் பலஜாதி நாய்களிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் விசேஷமான வித்தியாசமுண்டு. நாம் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் சில நாய்கள் தெரிந்துகொண்டு அவ்வாறு நடக்கின்றன. சில நாய்களுக்கு அவ்வாறு தெரிந்துகொள்ள அறிவில்லை. இவ்விஷயத்தைக்குறித்து திருஷ்டாந்தமாக ஒரு கதையைச் சொல்லுகிறேன் கேளும்:

வளர்த்தவர்கள்பேரில் மிக்க விஸ்வாஸமுள்ள நாய்களுண்டு. ஒரு கிராமத்தில் இரண்டுபேர் இரண்டு நாய்களை வளர்த்துவந்தார்கள். அவற்றிலொன்றை ஒரு துரையின் மகள் அது சிறுகுட்டியாயிருந்ததுமுதற்கொண்டு வளர்த்துவந்தாள். அந்நாய் தன்னை வளர்ப்பவரிடம் மிக்க பிரியமுள்ளது. அதை வளர்க்கும் சிறுவள் எவ்விடத்திலாவது வெளியே போகும்போது அதை வீட்டில் ஓரிடத்தில் பத்திரமாக விருக்கும்படி விட்டுவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு போவது வழக்கம். ஒருநாள் அப்பெண் வெளியே வேலைநிமித்தமாக போகும்போது நாயை வழக்கப்பிரகாரம் விட்டுச் சென்றாள். அவள் வெளியே சென்றுவிட்ட பிறகு, யாரோ கதவைத் திறந்து அந்நாயை வெளியே விட்டுவிட்டார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் வெளியே சென்றிருந்த சிறுபெண் வீட்டுக்குத் திரும்பும்போது வழியில் தன் பிரியமுள்ள நாய் தன் எதிரில் தன்னோடு கூட கலந்து வருவதைக் கண்டாள்.

உபயோகமுள்ள நாய்க ளநேகம் உண்டு. இவை மேற்சொன்னவைகளைப்போல் பிரியத்துடன் வளர்க்கப்படுவனவல்ல. இவைகளிலொன்று எவ்விடத்திலிருந்து வந்ததோ தெரியாது. என்றாலும், வீட்டுக்காரர் அதனிடத்தில் தயையுள்ளவர்களாய் அதற்கு ஆகாரம்வைத்து வளர்த்துவந்தார்கள். அவ்வாறு அதை வளர்ப்பது வியர்த்தமல்ல. அது அவர்களுக்கு அதிக உபயோகமாக விருந்தது. எலிகள், சுண்டெலிகள், பெருச்சாளிகள் முதலானவைகளை எங்குபார்த்தாலும் உடனே ஓடிப்போய் அவைகளைப் பிடித்துக்கொள்ளும். அதை பேரிட்டுக் கூப்பிட்டால் அவ்விடத்தில் எலி இருக்கிறதென்று அது தெரிந்துகொண்டு உடனே அவ்விடத்திற்கு ஓடிப்போகும்.

ஆட்டிடையர் நாயிற்கு ஆலோசிக்கும் சாமர்த்தியம் அதிகமாயுண்டு. இது ஆட்டிடையர்களால் வளர்க்கப்படுவதால் "ஆட்டிடையன் நாய்" என்றழைக்கப்படும். மந்தையிலிருந்து ஏதாவது ஒரு ஆடாகிலும், பசுவாகிலும், கன்றாகிலும், பன்றியாகிலும் தப்பி ஓடினால் அந்நாய் அதை மிகவும் ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொண்டிருந்து அதன் பின்னே ஓடி அப்புறம் போகாமல் மடக்கி மறுபடியும் மந்தையில் கொண்டுவந்து சேர்த்துவிடும். அந்த நாயினிடம் ஆடு காணோமென்று சொன்னோமாகில் உடனே ஆட்டுமந்தையில் போய் எல்லாம் சரியாகவிருக்கிறதாவென்று பார்க்கும். பசுவென்று இடையன் கத்தினால் பசுமந்தையில் எல்லாப் பசுக்களும் சரியாக விருக்கிறதாவென்று பார்க்கும். இடையன் வீட்டைவிட்டு வெளியே போனால் அது அவன் வீட்டின் வாசற்படியில் காவல் காத்துக்கொண்டிருக்கும். அச்சமயத்தில் அந்த இடையன் வீட்டுக்கு யாராவது போனால் அவரை வீட்டில் நுழையாமற்படிக்குத் தடுத்து, வீட்டை பத்திரமாகக் காத்துக்கொண்டிருக்கும். யாராவது அவ்விடையன் தொழுவத்தில் எதையாவது தொட்டால் அவர்களைக் கடிக்கும். இல்லாவிட்டால் அவர்களைப் பார்த்துக் குலைக்கும்.

ஆடுகளையும், மாடுகளையும், மேய்க்கும் நாய்களுமுண்டு. சில நாய்கள் இடையன் துணையில்லாமலே ஆடுகளையும், மாடுகளையும்மேய்த்துக்கொண்டு வருவதைப் பார்ப்பவர்களுக்கு மிகவும் அதிசயமாகவிருக்கும். அந்நாய்கள் காலையில் ஆடுகளையும், பசுக்களையும் மேய்ப்பதற்கு வயல்களுக்கு ஓட்டிக்கொண்டுபோய் அவ்விடத்தில் அவைகள் திருப்தியாக மேயும்வரை பகலெல்லாம் காவலிருக்கும். பலதடவை அவைகளைச் சுற்றிச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கும். அவைகளில் ஆடாகிலும், பசுவாகிலும் காணமற்போனால் உடனே ஓடிப்போய் அதிருக்குமிடத்தைக் கண்டுபிடித்துத் துரத்திக்கொண்டுவந்து மந்தையில் சேர்க்கும். சாயங்காலம் அவைகளை வீட்டுக்குத் துரத்திக்கொண்டுவந்து தொழுவத்திற்குள் ஓட்டிவிட்டு, தான் வீட்டுக்குப் போய்ச் சாப்பாடு தின்றுவிட்டு அத்தொழுவத்தின் வாசற்படியில் படுத்துக்கொண்டு காவலிருப்பதுமுண்டு.

குதிரைகள் எத்தனை வருடங்கள் ஜீவித்திருந்து உழைக்கும்?

குதிரைகளைச் சரியாகப் பாதுகாத்து வளர்ப்போமாகில் அவை இருபது வருடங்களுக்கு அதிகமாகவே ஜீவித்திருக்கும். சரியாகப் பாதுகாவாமல் அநாதரணை செய்வதால் அநேகம் குதிரைகள் அதிசீக்கிரத்தில் உடல் தளர்ந்து உபயோகமில்லாதவைகளாகின்றன. மேற்கில் காரன்வால் என்னும் தேசத்தில் ஜீவகாருண்யமுள்ள ஒரு பாக்கியசாலி ஒரு குதிரையை வளர்த்துவந்தார். அதற்கு வயது இருபத்து மூன்று வருடமானாலும் இன்னும் அதிக இளங்குதிரைகளோடு கூட வண்டிகளில் பூட்டி ஓட்டப்பட்டு மலையைப்போல் மேடாக விருக்கும் வழிகளிலும், பத்து மைல் தூரத்திலிருக்கும் பட்டணத்திற்குக் கொஞ்சமேனும் களைப்பில்லாமல் போக வரச் சக்தியுண்டாயிருக்கிறது.

இப்பாக்கியசாலி இதற்குமுன் ஒரு குதிரையை வளர்த்துவந்தார். அது சாகும்பொழுது அதற்கு வயது பதின்மூன்று வருடம். அது மரணமடைய ஒரு வருடத்திற்கு முன்பும் அது கஷ்டப்படுவதற்குச் சக்தியுள்ளதாயிருந்தது. சாகிறதற்குச் சில நாட்களுக்கு முன் அதை வண்டியில் போடுவதை நிறுத்திவிட்டுச் சுகமான ஓரிடத்தில் விடப்பட்டு அவ்விடத்தில் பச்சையாக வளர்ந்திருக்கும் புல்லை மேய்ந்துகொண்டு விநோதமாகத் திரிந்துகொண்டு காலத்தைக் கழித்துவந்தது. பின்பு அதிகமான கஷ்டமொன்று மில்லாமல் சுகமாகத் தன் ஜீவித காலத்தை முடிவு செய்துகொண்டது.

செயின்ட் பெர்னர்டு நாய்.

ஐரோப்பா கண்டத்தின் மத்தியப் பிரதேசத்தில் சுவிட்ஜர்லாந்து என்னும் ஒரு சிறிய தேசமுண்டு. அத்தேசத்தில் ஆல்ப்ஸ் என்னும் மிகவும் உயர்ந்த ஒரு பர்வதத்தொடர்ச்சியிருக்கின்றது. அம்மலையின்பேரில் செயின்ட் பெர்னர்டென்னும் மிகவும் பயங்கரமான பாதையொன்று போகிறது. அப்பாதையின் உச்சியில் செயின்ட் பெர்னர்டென்னும் சந்நியாசிகளின் மடமொன்று கட்டப்பட்டிருக்கிறது. ஜனங்களி னுயிரினிடத்து மிகவும் கருணையுள்ள சந்நியாசிகள் அநேகர் வழிப்போக்கர்களுக்குச் சகாயஞ்செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன், எப்போதும் அம்மடத்தில் குடியிருக்கிறார்கள். இத்தேசத்திலிருந்து இத்தலி தேசத்திற்குச் செல்வதற்கு இப்பர்வதங்களின்பேரில் மிகவும் செங்குத்தும் இடுக்கமுமான பாதைகளநேகமுண்டு. கோடைகாலங்களில் கூட இப்பர்வதங்களின்பேரில் பனிக்கட்டிகளுடன் காற்று மழைக ளடிக்கும். மாரிகாலங்களிலோ இவைகள் மிகவும் பிரமாதமாக அடிப்பதால் வழிப்போக்கர்கள் செல்வதற்கு, அப்பாதைகள் மிகவும் அபாயகரமாக விருக்கின்றன. சில சமயங்களில் காற்று மழைகள் திடீரென்று அகஸ்மாத்தா யடிப்பதால், பனிக்கட்டிகள் பெருந்திரளாக விழுந்து அவைகளின் கீழ் வழிப்போக்கர்கள் புதைந்துபோய் விடுகிறார்கள். அநேகருக்கு உயிரும்போய்விடுகிறது. இப்பேர்ப்பட்ட வழிப்போக்கர்களைக் காப்பாற்றும் பொருட்டு அபூர்வமான அறிவுள்ள ஒருஜாதி நாய்களை மேற்சொன்ன சந்நியாசிகள் வளர்க்கிறார்கள். ஆபத்துக்குட்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் வழிப்போக்கர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வேண்டிய சகாயஞ்செய்து அவர்களைக் காப்பாற்றுமாறு அந்நாய்களுக்கு அச்சந்நியாசிகள் கற்றுக்கொடுக்கிறார்கள். மழைகாலங்களில் அந்த நாய்களை இரண்டிரண்டாகச் சேர்த்து ஜதை ஜதையாய் வழிப்போக்கர்கள் செல்லும் பாதைகளுக்கனுப்புவார்கள். சிறிது ஆகாரமும், திராக்ஷரசம் அல்லது பிராந்திபுட்டி யொன்றையும் வைத்த சிறிய கூடையொன்றை ஒரு நாயின் கழுத்திற் கட்டி, மற்றொரு நாயின் முதுகின்பேரில் ஒரு கம்பளியைக் கட்டி அனுப்புவார்கள். ஆபத்திலகப்பட்டுக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவனை அந்த நாய்கள் பார்த்தால் உடனே அப்பேர்ப்பட்ட மனிதனுக்கு தாங்கள் கொண்டுவந்திருக்கும் அன்னவஸ்திரங்களைக் கொடுக்கும். அம்மனிதனுக்கு நடக்கிறதற்குச் சக்தியுண்டானால் அந்நாய்கள் அவனை மெல்ல மெல்ல சந்நியாசிகளின் மடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடும். அவ்வாறு அழைத்துவரும்போது குரைத்துக்கொண்டு தாம் திரும்பிவருவதை சந்நியாசிகள் கேட்டு சகாயம் செய்யும்படி செய்யும். ஆபத்திலிருக்கும் மனிதன் நடக்கமுடியாமல் மூர்ச்சையாய் விழுந்து கிடந்தால் அந்நாய்கள் திரும்பிப்போய் அம்மனிதனிருக்குமிடத்திற்கு சந்நியாசிகளை அழைத்துக்கொண்டுபோகும். சில சமயங்களில் சந்நியாசிகள் கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு ஆழத்தில் மனிதன் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்தால், அந்நாய்கள் எப்படியோ வாசனை பிடித்துக்கொண்டு தங்கள் கால்களால் அப்பனிக்கட்டிகளைத் தோண்டிவிட்டு மனிதனை வெளிப்படுத்தும். இம்மாதிரி நாய் ஒன்று 42 மனிதர்களின் பிராணன்களைக் காப்பாற்றினதாகச் சொல்லுகிறார்கள். அந்நாயின் பெயர் "பியாரி." அந்நாய் அவ்வளவு விவேகமுள்ளதாயிருந்தது. ஒருநாள் ஒருஸ்திரீ தன் சிறிய குமாரனை அழைத்துக்கொண்டு போகும்போது பனிக்கட்டிகளால் சறுக்கி சிறுவன் கீழே விழுந்துவிட்டான். பியாரி என்னும் நாய் அச்சிறுவன் குளிரினால் ஸ்மரணையற்றுக் கிடப்பதை யறிந்துகொண்டு அவனை மெல்லத் தன் முதுகின்பேரி லேற்றிக்கொண்டு சந்நியாசிகளின் மடத்திற்குக் கொண்டுபோயிற்று. அவ்விடத்தில் சந்நியாசி

கள் அவனை எடுத்துக் காப்பாற்றினார்கள். இவ்வாறு மனுஷர்களுக்கு மகோபகாரஞ் செய்து அவர்களின் உயிர்களைக்கூடக் காப்பாற்றக்கூடிய அறிவுள்ள நாய்களிடத்து நாமெவ்வளவு கருணையுடனும், நன்றியுடனும் நடந்து அவைகளை ரக்ஷிக்க வேண்டுமோ அச்சங்கதியை நீங்கள் நன்றாய் யோசியுங்கள்.

நமக்கு உபயோகப்படும் பிராணிகளிடத்தில் பக்ஷமாயிருத்தல்.

நான் ஒருநாள் போகப்போக மேடாகவிருக்கும் ஒரு வீதியில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு வீட்டின் வாசற்படியில் வைத்தியனுடைய வண்டி நின்றிருந்தது. அவ்வீதியின் முன்பாகம் மேடாகவும் பின்பாகம் பள்ளமாகவுமிருந்ததால் அவ்வண்டியின் சக்கரங்கள் பின்னுக்குப் புரண்டு போகாமலிருக்கும்படி அவ்வண்டியில் கட்டியிருந்த குதிரை இழுத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தது. நான் அவ்விடத்தில் நின்று கொஞ்சநேரம் அக்குதிரையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். உன் வேலைக்கு நீ போகாமல் அவ்விடத்திலேன் நின்றாயென்று கேட்பீர்கள்போலும்! நான் நிற்பதற்குக் காரணம் சொல்லுகிறேன்: எவ்விடத்திலாகிலும் என் கண்களுக்கெதிரே தென்பட்டதை அவசரப்படாமல் நிதானித்துப் பார்த்து அப்புறம் போக வேண்டுமென்பது என் உத்தேசம். நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவ்வண்டியின் குதிரை இரண்டு மூன்றுதரம் அவ்வண்டியானது புரண்டு போகாமற்படி நிறுத்த முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது. அடிக்கடி வண்டி பின்னுக்குப் புரண்டுவர ஆரம்பித்தது. உடனே அக்குதிரை தன்னாலானமட்டும் அவ்வண்டியை இழுத்து நிறுத்திற்று. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நான் அக்குதிரை படும் பாட்டையெல்லாம் பார்த்து மிகவும் பச்சாத்தாபப்பட்டவனாய் அவ்வீதியின் ஓரத்தில் கிடக்கும் கற்பாறைகளில் இரண்டைத் தூக்கி வந்து அவ்வண்டிச் சக்கரங்களின் பின்வைத்துப் புரண்டுபோகாமற்படிச் செய்துவிட்டு அப்புறம் போனேன். போகும்போது அண்டைவீட்டு வாசற்படியில் கொஞ்சநேரம் நின்று அவ்விடத்திலிருந்த ஒரு சிறுவனிடத்தில் இவ்விருத்தாந்தங்களையெல்லாம் சொன்னேன். நான் சொன்ன வார்த்தைகளெல்லாம் கேட்டு அச்சிறுவன், ''வண்டியைப் பின்னுக்குப் புரண்டுபோகாமற்படிச் செய்துவிட்டுப் போவதற்குள், வைத்தியனுக்கு வியாதியஸ்தனிடத்தில் மிகவும் அவசரமாகப் போகவேண்டி இருக்கலாம். அதனால் அவ்வைத்தியன் அவ்வாறு வண்டியை விட்டுப்போனானேயன்றி இல்லாவிட்டால் வண்டியைப் புரண்டு போகாமற்படிக்குச் சரியாக நிறுத்திவிட்டுத்தான் போயிருப்பான்'' என்று சொன்னான். நான் அவன் வார்த்தையைக் கேட்டு ''ஆம், நீ சொன்னது சரிதான், உண்மையாகத்தானிருக்கலாம். இக்குதிரை இல்லாவிட்டால் வைத்தியன் நோயாளியினிடத்தில்சீக்கிரம்வந்து சேருவதற்கில்லாமற் போயிருக்குமல்லவா? அவன் அக்குதிரைக்குக் கஷ்டமில்லாமற்படி செய்துவிட்டுப் போவதே அவனுடைய முக்கியமான கடமை. அவன் அக்குதிரைக்காக வேறொன்றும் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லையே! குதிரை பாதைப்படாமல் சுகமாக நிற்கத்தக்க உபாயத்தை அவன் யோசித்திருந்தால், அதுவே அவனுக்கு அதனிடத்திலிருக்கும் கனிகரத்தைத் தெரியப்படுத்தினது போலாகுமே'' என்று சொன்னேன். இவ்வாறு யோசனையின்றியே ஜனங்கள் ஜெந்துக்களை ஹிம்ஸித்து வருகிறார்கள்.

யானைகளின் விவேகம்.

தென் இந்தியாவுக்குச் சமீபத்தில் சிலோன் என்ற ஒரு தீவு உண்டு. அவ்விடத்தில் காட்டு யானைகள் கூட்டங் கூட்டமாக விருக்கின்றன. அவைகளைப் பிடித்துவந்து பழக்கினால், அவைகள் தேவாலயங்கள் கட்டும்போதும், மற்றும் பெரிய கட்டடங்கள் பாலங்கள் கட்டப்படும்போதும் பல பேர்கள் கூடிச்செய்யும்படியான அதிக கஷ்டமான வேலைகளையும் அபாரமான பளுவைத் தாங்கிச் செய்யவேண்டிய வேலைகளையும் இலேசில் செய்யும். யானையின் வாய்ப்பக்கத்தில் நீண்ட ஒரு அவயவம் உண்டு. அதுதான் தும்பிக்கையென்று சொல்லப்படும். அதுவே புஜமாகவும், கையாகவும், நாசியாகவும் யானைக்கு உபயோகப்படுகின்றது. அந்தத் தும்பிக்கையின் முனையில் சுமார் 5 அங்குல நீளமுள்ள ஓர் பாகமுண்டு. அதுவே அதற்கு கைவிரலைப்போல் உபயோகப்படுகிறது. யானை அதனால் தரையில் கிடக்கும் குண்டூசியையும் மற்றும் சிறிய பொருட்களையும் எடுத்துக்கொடுக்கும் சாமர்த்தியமுடையது. அன்றியும் அந்த விரலால் அதற்குச் செய்திருக்கும் பழக்கத்தால் அந்த குண்டூசியை யெடுத்து தரையில் எழுத்துக்களை எழுதவும் கூடும். யானைப்பாகன் ஒரு பெரிய கற்பாறையை ஓரிடத்தில் வைத்துவிட்டு வரும்படியதை யனுப்பினால், அந்தக் கல்லை அது எடுத்துக்கொண்டுபோய் குறிப்பிட்டவிடத்தில் வைத்துவிடும். தான் வைத்த கல் சரியானவிடத்தில் இருக்கிறதாவென்று அதைச் சுற்றிச்சுற்றிப் பார்க்கும். அது சரியாக வைக்கப்பட்டிருக்கவில்லையென்று தனக்குத் தோன்றினால் மறுபடி அதைத் தூக்கிச் சீர்திருத்தி வைக்கும். சிலோனில் ஒருகாலத்தில் இஞ்சினீர் ஒருவர் மலைகளின்மீது இரண்டுமைல் தூரத்திற்குத் தண்ணீர்க்குழாய் வைக்கும் வேலையை நடத்திவந்தபொழுது, அவ்விடத்தில் யானைகள் செய்துவந்த வேலைகளைக் கேட்க மிகவும்

விநோதமாயிருக்கும். ஒவ்வொரு யானையும் மிகப் பளுவான குழாய்களைத் தும்பிக்கையா லெடுத்து நடுவே தராசுபோல் சரிப்படுத்தி தூக்கிக்கொண்டு இடைவழியில் உள்ள கஷ்டங்களுக்கெல்லாம் சிறி தேனும் சலிப்பாமல் நடந்துவந்து, யானைப்பாகன் அந்தக் குழாய்களை யெந்தவிடத்தில் வைக்கச்சொல் லுகிறானோ அந்தவிடத்தில் அவைகளை அசையாமல் வைக்கும். பெருத்த உருவத்தையும், மிகுந்த பலத் தையும்கொண்ட இப்படிப்பட்ட ஒரு பெரிய ஜெந்துவானது நம்மிடத்துப் பழகி அடங்கி யொ டுங்கிச் சொற்படி கேட்டு விஸ்வாசமாயிருக்கும் போது அவைகளுக்கு நாம் கெடுதிசெய்யாமல் அவைகளை ஆயுள்பரியந்தம் காப்பாற்றவேண்டிய தன்றோ நம்முடைய கடமை.

தேனீக்களால் நாம் கற்கவேண்டிய எட்டு நீதிகள்.

1. நாம் எப்பொழுதும் வேலை செய்துகொண் டிருக்குமாறு தேனீக்கள் நமக்குப் போதிக்கின்றன. அவைகள் வேலைசெய்யாமல் எப்பொழுதாகிலும் சோம்பலாக விரா.

2. இராஜபக்தியும், விநயமுமுள்ளவர்களாய் ஜீவிக்குமாறு அவை நமக்குக் கற்பிக்கின்றன. தே னீக்கள் தம் எஜமானியாகிய ராணி ஈக்கு உட் பட்டு அதன் சொற்படி நடக்கும்.

3. நமக்கு நம் வீட்டினிடத்தில் அபிமானம் உண் டாயிருக்கும்படி அவை கற்பிக்கின்றன. தேனீக் கள் எப்பொழுதும் தம் கூண்டைவிட்டு வெளியே வாரா; அக்கரையுள்ள சமயத்தில் எப்பொழுதாகி லும் கொஞ்சநேரம் வெளியே போயிருந்து உட னே திரும்பி வந்துவிடுவது வழக்கம்.

4. நாமெல்லோரும் பரிசுத்தர்களாயிருக்குமாறு அவை நமக்குக் கற்பிக்கின்றன. தேன்கூண்டைப் போல் பரிசுத்தமான இடம் வேறொன்று காண்ப தரிது.

5. ஆபத்துக்காலம் வந்தபொழுது தேனீக்கள் ஒன்றின்மேலொன்று பிரியத்தை வெளிப்படுத்து கின்றன. ஒரு ஈயிற்கு *கஷ்டம் வந்தால், மற்ற ஈக்கள் தம்மாலியன்றமட்டும் அதற்குச் சகாயம்பண் ணுமேயல்லாமல் ஒரு நிமிஷமேனும் அதை விட் டுப் பிரியா.

6. தேனீக்கள் பிரதிதினம் அதிகாலையில் எழு ந்து வேலைசெய்வதற்கு ஆரம்பிக்கும். ஆனதால் அவை நமக்கு அந்நல் வழக்கத்தை கற்பிக்கின்றன.

7. தேனீக்கள் நல்லகாற்றில் உலாவுவதற்கு மிக வும் ஆசையுள்ளன.

8. தேனீக்கள் கோபமின்றி சாந்தகுணமுள்ள வைகளாக ஜீவிக்கின்றன. அவை ஒன்றோடொ ன்று கலகித்துச் சண்டையிடா. ஆகையால் அப் பேர்ப்பட்ட நல்ல குணத்தை நாம் அப்பியாசிப்பது மிகவும் நன்மையாகவிருக்கிறது.

பட்சிகளில் சிநேகம் உண்டு.

பட்சி ஜாதிகளில் ஒன்றுக்கொன்று சிநேகம் உண்டாயிருக்கிறதாக ஐரோப்பாவிலிருக்கும் காசம் பர்க்கிலிருந்து சில சமாசாரங்கள் தெரியவருகின் றன. ஓர் பெட்டைக்கோழி ஒருநாள் காலையில் தான் குஞ்சுபொரிக்க வேண்டுமென்கிற எண்ணத் துடன் தன்னுடைய முட்டையின்பேரில் அடை காத்து உட்கார்ந்திருக்கும் சமயத்தில் மிருதுவான சிறிய இறகுகளுள்ள ஊர்க்குருவிக் குஞ்சு ஒன்று யாருமறியாமல் அவ்விடம் வந்து சேர்ந்தது. அது முதல் அக்குருவிக்குஞ்சும், குஞ்சுபொரிக்கப்பட்ட கோழிக்குஞ்சும், மிக்க சிநேகத்துடன் விளையாடிக் கொண்டிருந்தன. தாயாகிய பெட்டைக்கோழி யும் தன் குஞ்சுடன் அன்பாய் விளையாடிவரும் இக் குருவிக் குஞ்சியையும் தன் குஞ்சியைப்போல் நன் றாய்ப் பாதுகாத்துவந்தது. மேலும் அக்குருவிக் குஞ்சு தன்னைவிட்டு ஓடிப்போகுமோயென்ற பயத் தால் அப்பெட்டை இரை சம்பாதிக்கவும் தூர மாய்ப் போகாமலே இருந்தது. அக்குருவிக்குஞ்சு க்கு பறந்துபோக பலமுள்ள இறகுகள் முளைக்கும் வரையில் அப்பெட்டையும் அந்தக் கூட்டிலேயே அவைகளோடு இராக்காலங்களில் படுத்து உறங்கிக் கொண்டுவந்தது. பின்னிட்டு சிலகாலம்வரையில் அவ்விரண்டு குஞ்சுகளும் பெரியவைகளானபோது அப்பெட்டை பகலெல்லாம் அக்குஞ்சுகளைக் கூட் டில் விட்டு தான் வெளியேபோகத் தலைப்பட்டது. இரவில்மாத்திரம் திரும்பிவந்து அவைகளுக்கு இரைகொடுத்துக் காப்பாற்றிவந்தது. பின்பு அவ்வி ரண்டு குஞ்சுகளும் நன்றாய் வளர்ந்தபிறகு தாய்ப் பெட்டை திரும்பி வருவதை முழுமையும் விட்டு விட்டது.

குறிப்புகள்.

பயிர்த்தொழிலின் நிமித்தமாக இந்தியா தேசத் திலிருந்து 30 ஆயிரம் ரூபாய் விலையுள்ள 264 சேங் கன்றுகள் ஜாவாவென்னும் தீவுக்கு சிலநாளைக்கு முன் ஏற்றுமதி செய்யப்பட்டன.

நிஜாம்ராஜ்யத்தில் விஸ்தாரமான காடுகளிருப் பதால் தேனீக்களை விருத்திசெய்யும் பொருட்டு 5,000 தேனீக்கள் சிலோனிலிருந்து ஐதாபாத் துக்கு இவ்வருடத்தில் வரவழைக்கப்பட்டன. சிங் கள தீபத்தின் தேனீக்களின் கூட்டம் மிக மேன் மை யானதாக எண்ணப்படுகிறது.

பசுக்களின் தேகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பிலும் தேவர்கள் வசிக்கிறார்களென்றும், அதனால் அவை மற்றப்பிராணிகளைவிடச் சிறந்தனவென்றும் இந்துக்களால் பூஜிக்கப்பட்டு சம்ரக்ஷணை செய்யப்படுவதும் உலகப்பிரசித்தம். ரிஷிகளெல்லாம் காமதேனுவைத் தெய்வத்தன்மையுள்ளதாகப் பாவித்துத் துதித்தார்கள். இந்துக்களின் மததர்மமும் கோரக்ஷணைதான். பசுவை பூதேவியென்றும் கூறுவர்.

குசவன் செய்த பச்சைமண் குடத்தின்பேரில் எழுதின சித்திரம் எவ்வாறு கெடாமலிருக்குமோ, அவ்வாறு பாலியத்தில் வித்தியார்த்திகளுக்கு நீதிகளைக் கற்றுக்கொடுத்தால் அந்நீதிகள் மனதில் சரியாய் வேரூன்றி அவர்களுக்குப் பலவிதங்களில் மேன்மையும், நன்மையும் உண்டாக்குமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

தொத்துவியாதிகள் குக்கிராமங்களில் கால்நடைகளுக்கு விஸ்தாரமாக சம்பவிக்கும். விவசாயம் முதலான வேலைகளுக்கு மாடுகள் வேண்டியிருப்பதால் இவைகளை மந்தை மந்தைகளாகச் சேர்த்து வைப்பார்கள். மந்தையில் எந்த மிருகத்திற்காவது தொத்துவியாதி கண்டால் அம்மிருகத்தை அப்புறப்படுத்தி தனியே வைக்கவேண்டும். தகுதியான வைத்தியம் குக்கிராமங்களி லிருப்பவர்களுக்குத் தெரியாததாலும், நல்ல வைத்திய சாஸ்திரங்களைச் சாமானியமான ஜனங்கள் கற்றறியாததாலும் நம் தேசத்தில் ஜெந்துக்கள் விசேஷமாக மாண்டுபோகின்றன.

குதிரையின் தேகத்தில் மயிர் சுழியாகத் திரும்பியிருக்கும். இத்தேசத்தினர் அவைகளால் சுபாசுபங்கள் உண்டாகுவதாக எண்ணுகிறார்கள். குதிரைகளை வாங்கும்போது கெட்ட சுழிகளில்லாமலிருக்கிறதாவென்று பார்க்கிறார்கள். ஆங்கிலேயருக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை இல்லாதிருந்தும், கெட்ட சுழிகளுள்ள குதிரையை வாங்கினால் அது எவ்வளவு உயர்ந்த ஜெந்துவானாலும் அதை தாம் மறுபடி விற்கவேண்டியிருந்தால்வாங்குபவர் நேரிடுவது கஷ்டமாயிருக்குமாகையால் பெருத்த விலைக்கு வாங்கினதை குறைந்த விலைக்கு விற்கவேண்டி வருமென்கிற பயத்தினால் அவர்களும் தாம் வாங்கும் குதிரைகளின் சுழிகளைப் பரிசோதிப்பார்கள்.

பாம்பு தன் குட்டிகளைப் பாதுகாக்கும் விசித்திரம்.—ஆஸ்டிரேலியாவில் ஓர்வித பாம்பு தனக்கு அபாயம்நேரிடும் சமயங்களிலே தன் வாயை விரிவாய்த் திறக்க அதன் குட்டிகள் யாவும் அதிவிரைவாய் உள்நுழைந்து அதி க்ஷேமமாயிருக்கின்றன; மறுபடி அபாயம் நீங்கினவுடன் முன்போல வெளிப்படுகின்றனவாம். இவ்வண்ணம் ஏககாலத்தில் 18 குட்டிகள் ஓர் அபாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக மக்டுயி என்பவர் தாம் நேரில் கண்டதாக அமெரிக்கா பத்திரிகையில் பிரசித்தம் செய்கிறார்.

ஓர் பட்சியின் ரோஷம். — பிரான்சுதேசத்திலுள்ள பர்ஸேலிஸ் பட்டணத்தில் ஆஸ்திரிச்சு என்னும் பட்சிகளைச் சிலர் பந்தயத்துக்கு விட்டார்கள். அத்தருணத்தில் அந்தப் பட்சிகளில் ஒன்று தோல்வியடைய வேண்டுமென்று கருதி ஒருவன் அதன் சிறகுகளில் சிலவற்றைக் கத்தரித்துவிட்டான். அவன் அப்படிச் செய்தது அதற்கு அவ்வளவு நோயைத் தராதிருந்தும், அதுதான் பந்தயத்தில் ஜெயமடைவதற்குப் பெருத்த இடையூறென்பதை யுணர்ந்து மஹா ரோஷங்கொண்டு அதிக கோபத்துடன் அவனைத் துரத்தித் துரத்தி உதைத்துக் குத்திக் கொன்றுவிட்டது. இப்படிப்பட்ட பட்சிகளுக்கே இவ்வளவு ரோஷமிருக்குமானால் கல்விச்சாலைகளில் கல்வி பயின்றுவரும் வித்தியார்த்திகள் கல்வியிலே தம்மிலும் சிறந்த மாணவரைக் கண்டு எவ்வளவு ரோஷமுடையவர்களாயிருக்கவேண்டும்.

பசுவின் பாலை பரிக்ஷை பார்த்ததில் அது நாய்ப்பாலின் பலத்தில் மூன்றிலோரளவு பலங்கொண்டதாய் அறியப்படுகிறது. ஆனதால் தாயிறந்த அல்லது தாயைவிட்டுப் பிரிக்கவேண்டிய நாய்க்குட்டிகளுக்கு பசு முதலானவற்றின் பால் போதுமான ஆகாரமல்ல. அப்படிப்பட்ட குட்டிகளை நன்றாய்க் காப்பதற்கு "லாக்டோல்" (Loctol) என்னப்பட்ட ஆகாரத்தை தயார்செய்து விற்கிறார்கள்.

யானைகளின் தேகசௌக்கியம், வியாதிகள், அவைகளுக்குச் செய்யவேண்டிய வைத்திய முறை முதலானவைகளைப்பற்றி பர்மாதேசத்து வாயில்லா ஜெந்து சிகிச்சை இலாகா சூபரிண்டெண்டெண்டு மேஜர் இவான்ஸ் துரையவர்களால் மிக்க உபயோகமுள்ள விநோதமான புத்தகமொன்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதின் விலை, ரூ. 3-8-0.

இங்கிலாந்து தேசத்தில் தகுந்த வைத்திய சாலைகளில் படித்து பரிக்ஷைகளில் தேராதவர்கள் வாயில்லா ஜெந்துக்களுக்கு சிகிச்சை செய்யக்கூடாதென்று 1881-ம் வருஷத்தில் ஓர் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்கள் வைத்தியம் செய்தால், அவர்களுக்கு ரூ. 315 வரையில் அபராதம் விதிக்கவேண்டிய தென்னும் நிபந்தனை அச்சட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று சில புத்திமான்கள் மனுசெய்துகொண்டிருக்கிறார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.